# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையிதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • அக்டோபர் 19, 2019

Weekly E-paper • OCTOBER 19, 2019





# ஏழு தமிழர் விடுதலை எப்போது?

சுப. வீரபாண்டியன்



## மோகன் பகவத்தின் தசரா உரை

கோ. மால்மருகன்



## பலே கல்கி சாமியார்

தலையங்கம்



## மாணவர்களைக் கிழிக்கும் ஜாதி

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● அக்டோபர் 19, 2019 Weekly E-paper ● OCTOBER 19, 2019


## ஏழு தமிழர் விடுதலை?
# பாஜகவின் குரலா சீமான்?

● சுப. வீரபாண்டியன்



முருகன் பேரறிவாளன் சாந்தன் நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயாஸ் ஜெயக்குமார்

இன்று (18.10.2019) காலை 'தி இந்து' ஆங்கில நாளேட்டில் ஓர் அதிர்ச்சியான செய்தி வெளிவந்துள்ளது.

தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், ராஜிவ் கொலைவழக்கில் கைது செய்யப்பட்டுக் கடந்த 28 ஆண்டுகளாகச் சிறையில் வாடும் ஏழு தமிழர்களின் விடுதலை குறித்த தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்க இயலாது என்று முதலமைச்சர் எடப்பாடியிடம் கூறிவிட்டதாகத் தெரிகிறது என்பதே அந்தச் செய்தி!

ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோதே, 2014 பிப். தொடங்கி இந்தக் கோரிக்கை மத்திய அரசுக்கு முன் வைக்கப்படுவதும், அதனை மத்திய அரசு மறுப்பதுமாக ஒரு போக்கு நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. நாங்கள் கேட்பது போல் கேட்கிறோம், நீங்கள் மறுப்பதை மறுத்துக் கொள்ளுங்கள் என்பதான நாடகமாகவே இது உள்ளது.



இதில் கவனிக்கப்பட வேண்டிய பல செய்திகள் உள்ளன. தமிழக அரசு உண்மையாகவே அந்தக் கோரிக்கையை வைக்கிறதா அல்லது கோரிக்கை வைப்பது போல் நடிக்கிறதா என்பது! அடுத்து, மத்திய அரசு, தன் மறுப்பை எழுத்து வடிவில் கூடத் தராமல், போகிற போக்கில் வாய்மொழியாக விடை சொல்லிவிட்டாலே போதும் என்று நினைக்கிறது என்னும் அவமானம்.

மூன்றாவதாக, இன்னொரு செய்தியையும் இங்கு நாம் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. சில நாள்களுக்கு முன், விக்கிரவாண்டியில் பேசிய சீமான், ராஜீவை நாங்கள்தான் கொன்றோம் என்று பேசினார்.(நாங்கள் என்றால் யார்?!). ஏழு தமிழர் விடுதலைக்கு அப்பேச்சு ஓர் இடையூறாக அமைந்துவிடக் கூடும் என்று பலரும் கருதினர். அது இன்று உண்மையாகிவிட்டது.

பேச்சினால் தடை ஏற்பட்டுள்ளதா அல்லது தடை ஏற்படுத்துவதற்காகவே பேசப்பட்டதா என்னும் வினாவும் இப்போது எழுகிறது. நாங்குனேரி இடைத்தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடும் நேரத்தில் இச்சிக்கலை மீண்டும் பேசுவதன் மூலம், அது காங்கிரசுக்கு எதிராகவும், பாஜக ஆதரிக்கும் அதிமுக வுக்கு ஆதரவாகவும் அமையும் என்பது வெளிப்படை.

விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு பிராபாகரனை இங்கு கொண்டுவந்து தூக்கிலிட வேண்டும் என்று அன்று பேசிய ஜெயலலிதாவிற்கு ஆதரவாக 2011 தேர்தலில் 'இலை மலர்ந்தால் ஈழம் மலரும்' என்று பேசியவர்தான் சீமான். தமிழீழ மக்களைக் கொன்று குவித்து நாடு திரும்பிய இந்திய அமைதிப் படையை ஊர் ஊராகச் சென்று வரவேற்றுப் பேசிய ம.பொ.சிக்கு சுவரொட்டி ஒட்டிப் பாராட்டும் கட்சிதான் நாம் தமிழர் கட்சி.

ஏழு தமிழர் விடுதலை குறித்துச் சோனியா காந்தி, ராகுல் காந்தி இருவருமே தங்களுக்குத் தடையில்லை என்று தெரிவித்திருக்கும் வேளையில், சீமான் இப்படிப் பேசி இதனைத் திசை திருப்பி இருப்பதில், பாஜக வினர் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றனர் என்று செய்திகள் வருகின்றன.

ஒருவேளை, சீமானின் குரல், பாஜக வின் குரல்தானோ? ●

## தமிழைப் புறக்கணிக்கும் தமிழ்நாடு தேர்வாணையம்!

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளைத் தேடித் தரும் நோக்கோடு உருவாக்கப்பட்ட தமிழ்நாடு தேர்வாணையம், இப்போது தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் எதிராகச் செயல்பட்டு வருகிறது.

இரண்டாம் பிரிவில் (குரூப்2) இருந்த தமிழ்மொழிப் பாடத்தையே அது நீக்கி விட்டது. தமிழுக்கு அங்கு இடமே இல்லை என்னும் நிலை ஏற்பட்டு வருகிறது.

தமிழக அரசோ, தேர்வாணையம் என்பது தனி அமைப்பு, அதில் நாங்கள் தலையிட முடியாது என்று பொறுப்பற்ற விடை ஒன்றைத் தருகிறது, தேர்வாணையக் குழுவின் செயலர், உறுப்பினர்கள், எல்லோரையும் தமிழக அரசுதான் நியமிக்கிறது. ஆனால் அநீதி நடக்கும்போது அமைதி காக்கிறது.

தமிழுக்கு எதிரான இப்போக்கைக் கண்டித்து, திராவிட இயக்கத் தமிழர் பேரவை விரைவில் ஒரு கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளது

# மோகன் பகவத்தின் தசரா உரை

**கோ. மால்மருகன்**

ராஷ்டிரிய சுவயம்சேவக் சங்க் (இனிமேல் “சங்க”) 1925ஆம் ஆண்டு தசரா தினத்தன்று தொடங்கப்பட்டது. அந்தத் தினத்தில் சர்சங்க்ஜாலக் (Sarsanghchlak) என்று அழைக்கப்படும் சங்கின் தலைவர் சங்க் உறுப்பினர்களுக்குத் தன்னுடைய ஆண்டுரையை நிகழ்த்துவார். 1990கள் வரை இதை யாரும் கண்டு கொள்ளவில்லை. ஏன், வாஜ்பாய் காலத்திலும் இந்த நிகழ்வு அவ்வளவாகக் கண்டு கொள்ளப்படவில்லை. எனினும் மோடி அரசு, 2014இல் அமைந்த பிறகு, இந்த நிகழ்வு மிகவும் எதிர் பார்க்கப்பட்ட ஒரு நிகழ்வாகக் கருதப்படுகிறது. 2014ஆம் ஆண்டு முதன் முதலாக மோகன் பக்வத்தின் தசரா உரை அரசு தொலைக்காட்சியான தூர்தர்ஷனில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தூர்தர்ஷனும், தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களும் இந்த உரையை நேரடி ஒளிபரப்பு செய்து வருகின்றன.

இதனை ஒட்டி இந்த ஆண்டும், அக்டோபர் 8ஆம் தேதி, மோகன் பகவத் இந்த ஆண்டின் தசரா உரையை நிகழ்த்தினார். HCL நிறுவனத்தின் தலைவர் ஷிவ்நாடார் அந்த கூட்டத்திற்குச் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு இருந்தார். மோடி தலைமையில் பாஜக ஆட்சி அரியணையில் ஏறிய பிறகு அரசியல் பார்வையாளர்கள் இந்த உரையைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினர். இந்த உரை அரசிற்கும் சங்கிற்கும் இடையேயான உறவு எவ்வாறு உள்ளது என்பதை ஊகிக்கும் ஒரு நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.



இந்த ஆண்டு சுமார் 64 நிமிடங்கள் இந்தியில் பேசிய மோகன் பக்வத், நாட்டில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளைப் பிரித்தானியப் பேரரசி போல் தொட்டுக் காட்டி சங்கின் வழிகாட்டுதலில் நடக்கும் ஆட்சி எப்படித் தன்னுடைய பணியைச் செய்து வருகிறது என்று எடுத்துரைத்தார். 2019 தேர்தலில் மிக உயரிய எண்ணிக்கையில் பாஜக வெற்றி பெற்றதைக் கோடிட்டுக் காட்டிப் பெருமிதம் அடைந்தார். கீழ்காணும் ஐந்து நிகழ்வுகளை அவர் விரிவாக விளக்கிக் கூறினார்.

(1) பிரிவு 370 நீக்கம் பற்றி :

மக்களின் நம்பிக்கையையும் நாட்டின் நலனையும் முன்னிறுத்தி கடினமான முடிவுகளை எடுக்கும் திறன் மோடி அரசிடம் உள்ளது. இதன் பொருட்டு, ஆகஸ்டு 5 அன்று ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குச் சம்மந்தப்பட்ட பிரிவு 370ஐ செயல்படாமல் ஆக்கியது மோடியின் அரசு. பகவத் அவர்கள் எவ்வாறு ஜனசங்க் நாட்களில் இருந்து சங்க் அமைப்புகள் இந்தப் பிரிவை எதிர்த்து வந்தன எனக் கோடிட்டுக் காட்டினார். ஜன் சங்கின் முதல் போராட்டமே இதனை ஒட்டி இருந்தது என்று நினைவு கூர்ந்தார். மக்களும் இதையே விரும்பினார்கள் என்பதும் மோடி அரசிற்குக் கிடைத்த 2019 தேர்தல் வெற்றி எடுத்துக் காட்டியது. அரசாங்கமும் ஜனநாயக முறைப்படி பாராளுமன்றத்தில் இரு அவைகளிலும் தீர்மானங்களை முன் வைத்துவெற்றிப் பெற்ற பிறகே அந்தச் செயலிழப்பை நடைமுறைக்குக் கொண்டு வந்தது. பாஜக தவிர மற்ற கட்சிகளும் இதற்கு ஆதரவு தெரிவித்தன. இது பிரதமருக்கும், உள்துறை அமைச்சருக்கும் கிடைத்த வெற்றியாகும் என்று கூறினார்.

(2) கூட்டுப் படுகொலைகள் ("Lynching") :

இப்போது நாட்டில் ஏற்பட்டு இருக்கும் நம்பிக்கையான சூழ்நிலையை விரும்பாதபவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய நன்மைக்காக நாட்டிற்கு அவமானம் சேரும் வேலைகளைச் செய்ய முனைகிறார்கள். நாட்டில் சில இடங்களில் ஒரு சமுதாய மக்கள் மற்றொரு சமுதாயத்தைச் சேர்ந்தவரைப் பிடித்து அடித்து இருக்கிறார்கள். 10, 15 பேருக்குள் நடக்கும் சச்சரவுகளை மிகைப்படுத்தி அதை ஒரு சமுதாயத்தின் மீது பழியாகச் சுமத்துகின்றனர். ஆனால் இந்த நிகழ்வுகளுக்கு "Lynching" என்று பெயர் வைத்து, சங்கிற்கும், இந்து மதத்திற்கும் கெட்ட பெயர் கொண்டு வர வேண்டுமென சிலர் விழைகிறார்கள். "Lynching" என்ற சொல்லிற்கு நமது மொழிகளில் ஏற்ற சொல்கூட கிடையாது. இது மேலை நாடுகளில் நடந்தேறிய பழக்கம். ஏசு கிருஸ்து ஒருமுறை ஒரு பெண்ணின் மீது ஒரு கும்பல் கல் எறிவதைக் கண்டு வேதனையடைந்து அந்தக் கும்பலை நோக்கி 'உங்களில் யார் ஒருவர் எந்த ஒரு பாவமும் செய்யாதவரோ அவர் மட்டும் கல் எறியலாம்" என்றார். இதற்கும் இந்து மதத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சின்ன சச்சரவுகளை இவ்வாறு சொற்களை வைத்து நம் நாட்டின் புகழுக்கு உலகம் முழுவதிலும் களங்கம் ஏற்படுத்த விழைகிறார்கள் நம் உள்நாட்டு எதிரிகள். இந்த உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இந்தியாவைப் போல மக்கள் நல்லிணக்கத்தோடு இருப்பதை நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா? இவ்வாறான சம்பவங்களை எதிர்கொள்ளச் சட்டங்கள் உள்ளன. அவை போதவில்லை என்றால் புதுச் சட்டங்களை இயற்ற வேண்டும். அது ஆட்சி செய்பவர்களின் கடமையாகும்.

(3) பொருளாதாரம் பற்றி: உலகப் பொருளாதாரம் எப்பொழுதும் ஒரு சக்கரம் போல சுழலும். சில சமயம் ஏறுமுகமாகவும், சில சமயம் இறங்கு முகமாகவும் இருக்கும். பொருளாதார முடக்கம் என்பது நாட்டின் வளர்ச்சி விகிதம் 0% குறைவாக இருந்தால்தான் ஏற்பட்டுள்ளது என்று கூறலாம். தற்போது நம் நாட்டின் வளர்ச்சி 5% உள்ளது. இதற்காக நாம் வேதனைபடலாம், ஆனால் இதைப் பற்றி நாம் பெரிதாக வாதம் செய்யத் தேவையில்லை. அவ்வாறு வாதம் செய்தால், பொருளாதாரத்தில் பங்கு பெறுவர்கள் விரக்தி அடைவார்கள். இதனால் பொருளாதாரம் மேலும் இறங்குமுகத்திற்குச் செல்லும். இப்போது அமெரிக்காவுக்கும், சீனாவிற்கும் இடையே வர்த்தகப் போர் நடைபெறுகிறது. திருப்பூர் போல நம் இந்தியர்களாலும் ஒரு நகரையே மாற்றி அமைக்க முடியும். அதற்கு உண்டான சக்தி நம்மிடம் உள்ளது.

சுதேசிக் கொள்கையை நாம் ஏற்கிறோம். ஆனால் எந்தப் பொருள்கள் நம் நாட்டில் உற்பத்தி செய்ய வில்லையோ அப்பொருள்களை நாம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து கொள்ளலாம். அந்த இறக்குமதிகள் நமக்கு லாபம் பயப்பதாகவும், நம் விதிகளுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும். இதுவும் சுதேசிக் கொள்கையின் வேறு பரிணாமம் ஆகும். மேலும் GDP என்பது மட்டும் நம் பொருளாதாரத்தை எடைபோடும் குறியீடாக இருக்க முடியாது.வேறு குறியீடுகளையும் நாம் ஏற்படுத்த வேண்டும்.

(4) கல்வி பற்றி: கல்வி என்பது வெறும் வயிறு வளர்ப்பதற்கு அன்று. கல்வியின் மூல காரணம், ஒரு மனிதனை சிறந்த மனிதனாக மாற்றுவதற்காக கொடுக்கப்படுகிறது. தன்னுடைய மொழி, தன்னுடைய பண்பாடு, சுதேசி, தன்னுடைய பரம்பரை போன்றவைகளை ஒருவனுக்கு எடுத்துக் கூறுவது கல்வியே. இதைத்தான் புதிய கல்விக் கொள்கை எடுத்து முன்வைக்கிறது. இது ஒரு நல்ல நடவடிக்கையாகும்.

5.பெண்கள் பற்றி:

நம் நாட்டின் இல்லற வாழ்வியல் மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது. லஷ்மணன், சீதாவின் முகத்தைக் கூட பார்த்தது கிடையாது. இவ்வாறு இருந்த நம் சமுதாயத்தில் பெண்களுக்கு வீட்டிலும் பாதுகாப்பு இல்லை, வெளியிலும் பாதுகாப்பு இல்லை. இதனால் நாம் அனைவரும் வெட்கித் தலை குனிய வேண்டும். நம் பெண்களுக்கு நாம் பாதுகாப்பு மட்டும் கொடுத்தால் போதாது.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## அம்பேத்கர் பொறியாளர் சங்கத் தொடக்கம்



12-10-2019 அன்று சென்னை அண்ணாநகர் டாக்டர் அம்பேத்கர் பொறியாளர் சங்கத் தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவைத் தலைமை ஏற்று தொடக்கி வைத்தார் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா. பேராசிரியர் சுப.வீரபாண்டியன், செல்லப்பன் ஐ.ஏ.எஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விழாவின் அறிமுக உரையை செல்வின் சௌந்தரராஜன் நிகழ்த்த, நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தார் உமா.

## சேலத்தில் ‘பெரியாரும் - பெண்களும்’




சேலம் மாவட்டத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் மு.புவனேஸ்வரி தலைமையில் ‘பெரியாரும்- பெண்களும்’ என்ற தலைப்பில் 13.10.2019 அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. திரு.சுப்புலட்சுமி ஜெகதீசன், தோழர் சுப. வீரபாண்டியன், எழுத்தாளர் இரா.உமா ஆகியோர் கருத்துரை ஆற்றினார்கள். தோழர்கள் சிற்பி செல்வராஜ், புலேந்திரன், மேட்டூர் குமார், ஆசிரியர் கந்தசாமி ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

## சென்னையில் நூல் அறிமுகம்




திராவிட இயக்கத் தமிழர் பேரவை, தலைமை அலுவலகத்தில் 13-10-2019 அன்று சரவணன் தலைமையில் நூல் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. ‘ஒரு மனிதன் ஒரு இயக்கம்’ என்ற நூலை வெற்றிச்செல்வனும், ‘தந்தை பெரியார் கண்ட போராட்டங்களும் போராட்ட உத்திகளும் என்ற நூலை துரைமுருகனும் அறிமுகம் செய்தனர். காதர் மஸ்தான், ரவி குமார், சித்ரா, அன்பு, இந்துமதி, அறவாழி உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பலே கல்கி சாமியார்





இந்தியாவில் இருக்கும் கோடீஸ்வர சாமியார்கள் 10 பேர்களில் ஜக்கி வாசுதேவ், அமிர்தானந்த மயி, பாபா ராம்தேவ், ரவிசங்கர், நித்யானந்தா உள்ளிட்டோர் வரிசையில் கல்கி சாமியாரும் இருக்கிறார்.

1989ஆம் ஆண்டு “நான் விஷ்ணுவின் அவதாரம், என் பெயர் கல்கி பகவான்” என்று, சென்னை பூந்தமல்லி நேமம் கிராமத்தில் பட்டறையைப் போட்டார் எல்.ஐ.சி ஏஜண்டாக இருந்த விஜயகுமார்.

இன்று இவருக்கு ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்கள் அடங்கிய இந்தியாவில் பரவலாகவும், ஆப்பிரிக்க, ஐரோப்பிய நாடுகளில் நூற்றுக்கணக்கிலும் கிளைகள் பரந்து இருக்கின்றன.

இந்தச் சாமியாரை நம்பி உள்ளூர் பக்தகோடிகளும், வெளிநாட்டுப் பக்த கோடிகளும் ஏராளமாகக் காணிக்கைகளை வாரி வழங்கி இருக்கிறார்கள்.

அவையெல்லாம் இந்தச் சாமியாரின் வருமானம்.

சுவிஸ் வங்கியில் இந்தியக் கார்பரேட்டுகள் போட்டிருந்த பணத்திற்குரியவர்களின் பெயர்களை மத்திய அரசிடம் சுவிஸ் அரசு கொடுத்துள்ளது. அந்தப் பட்டியலில் நம்முடைய கல்கி சாமியாரும் மாட்டிக் கொண்டார்.

அதன் விளைவாக அண்மையில் 40க்கும் மேற்பட்ட இடங்களில் கல்கிக்குச் சொந்தமான ஆசிரமங்களில் வருமான வரித்துறையினர் சோதனை இட்டதில் ரூ.24 கோடி இந்தியப் பணமும், ரூ.9.8 கோடி மதிப்புள்ள வெளிநாட்டு டாலர்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

முதல் நாள், வருமான வரிச்சோதனையின் போது கிடைத்த ஆவணங்களின் மூலம் இந்தச் சாமியார் 200 கோடிக்கும் மேல் வரி ஏய்ப்பு செய்துள்ளார் என்பது தெரியவந்திருக்கிறது.

இவரின் ஆசிரமத்தில் சேவை செய்த பக்தகோடிப் பெண்கள் கூட, காணாமல் போய்விட்ட செய்தியைப் பத்திரிகையில் பார்க்கிறோம்.

கல்கி சாமியாரின் மகன் கிருஷ்ணா ரியல் எஸ்டேட் போன்ற பலதொழில்களைச் செய்துவந்துள்ளார்.

இதன் மூலம் இந்தியா மட்டுமல்லாமல் ஆப்பிரிக்க, ஐரோப்பிய நாடுகளிலும் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களும் இவர்களிடம் இருக்கின்றன.

“என் பெயர் விஷ்ணு பகவான்” என்று சொன்ன இவருக்கு இவ்வளவு பெரும் சொத்து தேவைதானா?

உழைக்கும் மக்கள் கடவுளில் மயங்கி இந்தச் சாமியார்களிடம் கொடுக்கும் காணிக்கைகள் எவ்வளவு பெரிய சொத்தாகச் சேர்ந்திருக்கிறது! இதை ஏன் மக்கள் உணரவில்லை.

கல்கி சாமியார் ஒரு ‘சாம்பிள்’தான். இந்த ‘சாம்பிள்’ ஏனைய காவிச் சாமியார்கள் அனைவருக்கும் பொருந்தும்.

மக்கள் விழிக்காத வரை சாமியார்கள் விழித்திருப்பார்கள். மக்கள் விழித்தால் சாமியார்களின் ‘தூக்கம்’ நிச்சயம்.

# மாணவர்களைக் கிழிக்கும் ஜாதி

மா. உதயகுமார்

மதுரைக்கு அருகே உள்ள மறவப்பட்டி என்னும் ஊரைச் சேர்ந்தவர் மாணவர் சரவணகுமார். தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவரான மாணவர் சரவணகுமார் சகமாணவரால் ஜாதியின் பெயரால் தாக்கப்பட்டுள்ளார். சரவணகுமாரின் முதுகை மகாஈஸ்வரன் என்னும் மாணவர் பிளேடால் கிழித்துள்ளார். சமத்துவம் கற்றுத் தரப்பட வேண்டிய பள்ளிக்கூடங்களிலேயே ஜாதியப் பாகுபாடு நிலவுகிறது. அண்மைக் காலங்களில் இது போன்ற பல நிகழ்வுகள் பள்ளிகளில் நடக்கின்றன.



கண்ணுக்குத் தெரியாத கிருமி போல் பரவிக் கொண்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் கிளை அமைப்புகள் ஜாதிய அமைப்பைத் தக்க வைக்கும் பொருட்டு ஜாதிச் சங்கங்களோடு கைகோத்துக் கொண்டு மாணவர்கள் கையில் ஜாதிக் கயிறைக் கட்டிவிடுகின்றனர். இந்த ஜாதிக்கயிறை அறுத்து எறிய அரசு ஆணையிட்டால் அவர்கள் அரசையே மிரட்டுகிறார்கள். மிரண்டுபோகும் ஆட்சியாளர்கள் இருந்தால் இந்த நாடு இருண்டுதான் போகும்.

இது போன்ற நிகழ்வுகள் பெரும்பாலும் கிராமப் பகுதிகளிலேயே நடக்கின்றன. ஜாதிகளின் தொகுப்புகளாகவே நம்முடைய கிராமங்கள் இருந்து வருகின்றன. ஜாதி ஒழிய வேண்டும். நாகரீக வளர்ச்சி ஏற்பட வேண்டும். சென்னை போன்ற பெருநகரங்களில் இருப்பதைப் போன்று யார் ஒருவரையும் ஜாதியால் அடையாளம் காணமுடியாத நிலை ஏற்பட வேண்டும். “எனது கிராமச் சீர்திருத்தத் திட்டம் என்பது என்னவென்றால் நாட்டில் கிராமங்களே எங்கும் இல்லாதபடி அவற்றை ஒழித்து விடுவதேயாகும்” என்று 31.10.1944 இல் ஈரோட்டில் நடைபெற்ற கிராம அதிகாரிகளின் பயிற்சிப்பள்ளி ஆண்டு விழாவில் தந்தை பெரியார் குறிப்பிட்டார். 2019 இலும் நாம் இதே இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டியிருக்கிறது.

தந்தை பெரியாரின் கருத்துக்களை மாணவர்களிடம் அரசு கொண்டு செல்ல வேண்டும். மாணவர்களுக்குக் கொண்டு செல்லும் முன் ஆசிரியர்களிடம் பெரியாரின் கருத்துக்களையும் அம்பேத்கரின் கருத்துக்களையும் கொண்டு செல்ல வேண்டும். ஆசிரியர்கள் வகுப்பில் பாகுபாடு காட்டாமலா மாணவர்கள் பாகுபாடு காட்டுகிறார்கள்? பல கிராமப்புறப் பள்ளிகளில் ஆசிரியர்களே தாழ்த்தப்பட்ட மாணவர்களைத் துப்புரவுப் பணிகளில் ஈடுபடுத்துவதைப் பார்க்கிறோம்.

இவ்வளவு பாகுபாடுகளுக்கிடையில் அந்த மாணவர்கள் எப்படிப் படிக்க முடியும்?

இந்த மோசமான நிலையை மாற்ற அரசு முயற்சி எடுக்க வேண்டிய காலகட்டத்தில் புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்த மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. நாம் எப்போதுமே புதுமையை விரும்புகிறவர்கள்தான். ஆனால் இந்த புதிய கல்விக் கொள்கை என்பது பழமையிலும் பழமையானது. குருகுலக் கல்வியை நவீன முறையில் அறிமுகப்படுத்துவது. இந்தக் கல்விக் கொள்கையில் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களன்று. உள்ளூர் சமூகத்தினரே ஆவர். பள்ளிக் கூடங்கள் உள்ளூர் சமூகத்தினரின் பிடியில் தான் இருக்கும். பள்ளிக்கூடங்கள் முழுமையாக அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்போதே இவ்வளவு வன்முறைகள் நடக்கும் போது, உள்ளூர் சமூகத்தினரின் பிடியில் பள்ளிகள் இருந்தால் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பாடத்திட்டங்களில் “இந்திய”ப் பாரம்பரிய முறைகளுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படும். “இந்திய”ப் பாரம்பரிய முறைகளில் ஜாதிய வேறுபாடுகளைத் தவிர வேறு என்ன இருக்கிறது. இப்படிப்பட்ட கொடிய நோய் நம்முடைய குழந்தைகளைத் தாக்க இருக்கிறது. இந்த நோயைத் தடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் நாம் எல்லோரும் இருக்கிறோம்.

அதனால்தான் ஜாதியின் பெயரால் இழிவுபடுத்தப்பட்டு முதுகு கிழிக்கப்பட்ட செய்தியைக் கேட்டு நாம் ஆத்திரப்படுகிறோம், அவர்கள் தங்கள் செயல் திட்டம் சரியாக நிறைவேறுவதை எண்ணி ஆனந்தப்படுகிறார்கள். இன்று ஒரு மாணவருக்கு முதுகு கிழிக்கப்பட்டிருக்கிறது. இப்போதே நாம் விழித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் இனி வரும் காலங்களில் மாணவர்களே கிழிக்கப்படுவார்கள். ●

2ஆம் பக்கத் தொடர்ச்சி

நம் நாட்டையும், வீட்டையும் சமத்துவத்துடன் நடத்தி செல்லும் அதிகாரத்தையும் நாம் அவர்களிடம் கொடுக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் உதவி செய்ய வேண்டும்.

முடிவுரையில சங்க் எப்போதும் இந்தியா, ஒரு இந்து ராஷ்டரம் என்பதை மறைப்பது இல்லை என்று பகவத் கூறுகிறார். இந்து என்பவன் இந்த உலகத்தில் உள்ள ஒரே உண்மை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது என்பதை நம்புபவன். அதனால் நாம் அனைவரும் தத்தம் பாதையில் சென்று ஒன்றாகப் பரம்பொருளை அடையலாம் என்று முடிக்கிறார்.

மோகன் பகவத் உரையில் இருந்து கீழ்க்கண்டவை உறுதியாகிறது.

1. சங்க் அமைப்பு பிரிவு 370ஐ மோடி அரசு செயலிழக்கச் செய்ததில் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறது.
2. கூட்டுப் படுகொலைகளும், பொருளாதார முடக்கத்தின் தாக்கத்தின் வீரியத்தை சங்க் அமைப்பு முழுமையாக உணர்ந்திருக்கவில்லை. மாறாக இவைகளை அரசுக்கு கெட்ட பெயர் கொண்டு வருவதற்கு எதிரிகளின் சூழ்ச்சியின் வெளிப்பாடாகக் கருதுகிறது.
3. புதிய கல்விக் கொள்கையால் சங்க் அமைப்பு மகிழ்ச்சியில் உள்ளது.
4. பெண்கள் பாதுகாப்புப் பற்றி சங்க் கவலை கொண்டு இருக்கிறது. அதனால் அரசு வரும் ஆண்டுகளில் சில நடவடிக்கைகள் எடுக்கக் கூடும்.
5. சங்க் அமைப்பும், மோடி அரசும் தங்களுக்குள் நம்பிக்கையோடும், புரிதலோடும் சங்கின் கோட்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றன.
6. இப்போதைக்கு மோடி அரசுக்கு சங்கில் இருந்து எந்த ஆபத்தும் இல்லை. மோடியும், ஷாவும் அந்த அமைப்பின் நம்பிக்கைக்கு உரியவர்கள் ஆவர். ●